அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 17/99

எனது இல:தா/1/14/3(1),

அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு.

சுதந்திர சதுக்கம்.
கொழும்பு-07.

1999 யூலை மாதம் .21..ந் திகதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் தலைமை செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

## எழுதுநர் சார்ந்த சேவைகளிலுள்ள பட்டதாரிகளுக்கு நிவாரணமளித்தல்

1971 தொடக்கம் 1977 வரையிலான காலத்திற்குள் பட்டதாரி பயிலுநர் திட்டத்திற்குப் புறம்பாக எழுதுநர் சார்ந்த சேவைகளுக்கு சேர்த்துக் கொள்ளப் பட்ட பட்டதாரிகளுக்கு 2/97(111)ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ரீ-3-8-2 இன் சம்பள அளவுத் திட்டமான ரூபா 90,120-16X2460-129,480 /-ஐ வழங்க வேண்டுமென்று அரசு தீர்மானித்துள்ளது.

02. 1994.06.15 ஆந் திகதிய 20/94 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின்படி இவ் உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ரூபா 79,380-16X2460-118,740(ரீ-3-8) சம்பள அளவுத்திட்டத்தில் உழைத்துப் பெற்றுள்ள சம்பளப் படிநிலையின் அடிப்படையில் புதிய சம்பளங்களுக்கு மாற்றியமைத்தல், இச் சுற்றறிக்கையின் 1ஆம் இணைப்பில் காட்டப்பட்டுள்ளவாறு படிநிலை அடிப்படையில் 1999.06.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப் படுத்த வேண்டும்.

03. பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/ (பி.ஏ.சேனாரட்ன)
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின்
செயலாளர்.